மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம். இம் மாநாடு 1968-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்றது.

(இ) உயர்நிலை உடற்கல்வி ஆசிரியர்களில் சம்பள விகித உயர்வுக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்த போதிலும் உயர்நிலை சான்றிதழ்ப் பெற்றுள்ள உடற் கல்வி ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற தனிச் சம்பள மாகிய ரூ. 5, 10 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

THIRU G. KRISHNAMOORTHY : Thanks to the Government.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, மாநாட்டினர் வேண்டிக் கொண்ட சம்பள உயர்வு விதம் எவ்வளவு? அரசு வழங்கியது எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாநாடு சம்பள விகிதத்தையே மாற்றியமைக்க விரும்புகிறது. 1960-ல் பே-கமிஷன் அனுமதித்த சம்பளத்தை நாம் கொடுக்கிறோம். ஆகையால் இப்போது சம்பள விகிதத்தை மாற்றத் தயாராக இல்லை. கொடுக்கிற அலவன்ஸ் ஹையர்கிரேடுக்கு ரூ. 5-லிருந்து 10-க்கு உயர்த்தப்பட்டி ருக்கிறது.

Language Teachers.

*102 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the alternative arrangements made by the Government for employing the language teachers, who have lost their jobs consequent on the implementation of the Two-language formula in schools?

(THE HON. THIRU S. MADHAVAN : Orders have been issued—

(1) for the absorption of the existing qualified Hindi and ohter language Pandits in regular service in suitable alternate posts;

(2) for the conduct of in-service ttaining for Pandits, Grades I and II who have passed S.S.L.C. but do not have secondary grade training, so as to enable them to appear for the T.S.L.C. (Secondary Grade) ;

(3) for giving protection of their scale of pay in whatever capacity they are absorbed.

(1) இப்போதுள்ள தகுதி பெற்ற இந்திப் பண்டிதர்களையும் பிறமொழிப் பண்டிதர்களையும் தகுந்த மாற்றுப் பதவிகளில் பண்டிதர்களுக்குப் பணியிருப்புப் படிற்சியளிக்கவும்;

(2) அவர்கள் டி.எஸ்.எல்.சி (இடைநிலைத்தரம்) தேர்விற்குச் செல்லும் வகையில் இடைநிலைத்தரப் பயிற்சி பெறாத, ஆனால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற I, I -ம் நிலையைச் சேர்ந்த பண்டிதர்களுக்குப் பணியிருப்புப் பயிற்சியளிக்கவும்;

(3) அவர்கள் எந்தப் பணியில் வேலைக்கமர்த்தப்படினும் அவர்களின் சம்பள விகிதம் பாதிக்கப்படாமல் பாதுகாப்பளிப்பதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

THIRU G. KRISHNAMOORTHY : Will the Government give me the number of unqualified or partly qualified part-time and full-time teachers who have been sent out ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : புதிய திட்டத்தால் பாதிக்கப்படுகிற மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 263; அவர்களுக்குப் பின்னல் அரசாங்கம் உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற உத்தேசத்தில் இருக்கிறது. 175 பேர் திரும்ப வேலையில் வைக்கப்பட்டுள்ளனர். 1,729 பேருக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டது. 16 பேர் போதிய படிப்பு (unqualified) இல்லாதவர்களாக இருந்தாலும், மாற்றுவேலை தரப்பட்டது. மீதமுள்ளவர் (unqualified) 653 பேர்கள்.

THIRU G. KRISHNAMOORTHY : In view of the large provision made in the Budget, Sir, for new teachers, will the Government consider the proposal just to give relief to these teachers also subject to the condition of getting in-service training, etc., for Secondary Grade teachers?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஏற்கனவே இருப்பவர்களுக்கு சர்வீஸ்-இன்-டிரெயினிங் கொடுத்து அந்த வேலை உறுதிப்படுவதற்கு மாற்று முறை வகுக்கப்பட்டது. வேண்டிய படிப்பு இல்லாதவர்கள், பார்ட்-டைம் ஆக இருந்தவர்கள் போன்றவர்களுக்கு, எந்தெந்த முறையில் வேலை வாய்ப்புக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க முயற்சிக்கப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : பணியிருப்புப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டு, இறுதியில் தேர்வு எழுத அனுமதிக்கப்படாமல் இருந்தவர்கள் எத்தனை பேர்? பயிற்சி இல்லாமல் வேறு பணி பார்த்துக் கொடுக்கப்படாமலும் இன்னும் சம்பளம் வாங்காமலும் இருக்கிறவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : 1,750 பேர் வேலையிலிருந்து போகாமல் வைக்கப்பட்டு, அந்த இடைக் காலத்தில் அவர்கள் இந்தப் பயிற்சி பெறலாம் என்றுதான் வைத்திருக்கிறது.

Uniform for teachers

* 103 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any decision was taken at the meeting of the State Educational Advisory Committee regarding uniform for teachers; and

(b) if so, the details thereof ?